முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.7.2023) முகாம் அலுவலகத்தில், இலங்கை நாட்டின் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஆ. ஜீவன் தொண்டமான் அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பொதுத்துறை செயலாளர் க. நந்தகுமார், சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தின் துணைத் தூதர் டாக்டர் வெங்கடேஸ்வரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

2 பேருந்துகள் மோதல்: 6 பேர் பலி

மும்பை, ஜூலை 30

மராட்டியத்தில் 2 ஆம்னி பஸ்கள் நேருக்குநேர் பயங்கரமாக மோதிக்கொண்ட விபத்தில் 6 பேர் பலியாகினர். மராட்டிய மாநிலம் ஹிங்கோலி பகுதியை சேர்ந்த பக்தர்கள் சிலர் ஒரு ஆம்னி பஸ்சில் அமர்நாத் யாத்திரைக்கு சென்றனர். பின்னர் அவர்கள் ஹிங்கோலிக்கு திரும்பினர். பஸ் மல்காபூர் பகுதியில் உள்ள நந்தூர் நாகா மேம்பாலத்தில் வந்து கொண்டிருந்தது. எதிரே நாசிக் நோக்கி தனியார் ஆம்னி பஸ் ஒன்று வந்துகொண்டிருந்தது. இந்த பஸ் முன்னால் சென்ற லாரியை முந்த முயன்றதில் இவ்விபத்து ஏற்பட்டது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தமது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

இளைஞர் அணி மாநாட்டிற்காக

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் ரூ.51 லட்சம் நிதி!

இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் வழங்கினர்!

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. ஆகியோர் முன்னிலையில் இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம், இளைஞர் அணி மாநாட்டிற்காக, அணியின் துணை செயலாளர்களான எஸ்.ஜோயல், இன்பா என்கிற ரகு, நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், பி.எஸ்.சீனிவாசன், க.பிரபு, ஜி.பி.ராஜா, சி.ஆனந்த் குமார் ஆகியோர் ரூ.51 லட்சம் நிதி அளித்தனர்.

மிண்ணனு வர்த்தகத்தை 2030 ஆண்டிற்குள்

35,000 கோடி டாலர்களாக உயர்த்த, அரசின் முயற்சிகள் என்னென்ன?

மக்களவையில் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி?

புதுடெல்லி, ஜூலை 30 - திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்றஉறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் 26 ஜூலை 2023அன்று, மக்களவையில், மிண்ணனு வர்த்தகத்தை 2030 ஆண்டிற்குள் 35,000 கோடிடாலர்களாகஉயர்த்த, ஒன்றிய அரசின் முயற்சிகள் என்னென்ன?என்றும் அதன் விவரங்களைஉறுப்பினர்களுக்கு தெரிவிக்கஇயலுமா?என்றும் ஒன்றியஅரசின் மாண்புமிகு வர்த்தகத் துறை இணையமைச்சர் திருமதி அனுபிரியா பட்டேலிடம் விரிவான கேள்வியைஎழுப்பினார்.

ஒன்றியஅரசின் வர்த்தகத் துறைஇணையமைச்சர்அவர்கள், அளித்தபதில்பின்வருமாறு

மிண்ணனு வர்த்தகத்தின் மூலம் இந்தியாவின் ஏற்றுமதியைமேம்படுத்த ஒன்றியஅரசுபல்வேறுமுயற்களைஎடுத்து வருகிறது என்றும், குறிப்பாக புதியவெளிநாட்டு வர்த்தககொள்கையில்தேவையானமாற்றங்கள்செய்யப்பட்டுள்ளதுஎன்றும், நிராயத் பந்துதிட்டத்தின் மூலம் ஏற்றுமதியாளர்களுக்குதேவையானஉதவிகள்அளிக்கப்படுவதாகவும், அணிகலகன்கள்ஏற்றுமதிக்காகதனியார் அஞ்சல்வசதிஏற்படுத்தபட்டுள்ளதாகவும், 28க்கும் மேற்பட்டவெளிநாட்டுஅஞ்சலகங்கள்இயங்கி வருவதாகவும், 122க்கும் அதிகமானநிராயத் மையங்களின் மூலம் ஏற்றுமதிபொட்டலங்களுக்கானஉதவிகள்வழங்கப்பட்டு வருவதாகவும், ரூபாய்பத்து இலட்சம் வரைமதிப்புடைய பொருட்கள்மிண்ணனு வர்த்தகத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் என்றும் ஒன்றியஅரசின் மாண்புமிகு வர்த்தகத்துறைஇணையமைச்சர் திருமதி அனுபிரியா பட்டேல் மக்களவையில்திமுகஅரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், அவர்கள்எழுப்பியகேள்விக்கு,விரிவானபதிலைஅளித்துள்ளார்.

நாடாளுமன்றத்துக்கு வராமல் ஓடி ஒளியும்

பிரதமர் மோடி நாட்டிற்குத் தேவையா?

இரா.முத்தரசன் கடும் தாக்கு!

ராஜபாளையம். ஜூலை 30- அண்ணாமலையின் யாத்திரை பா.ஜ.வுக்கு எழுதும் முடிவுரை. மணிப்பூர் விவகாரத்தில் நாடாளுமன்றத்துக்கு வராமல் ஓடி ஒளியும் பிரதமர் மோடி நாட்டிற்கு தேவையா? என்று முத்தரசன் கடுமையாக விமர்சித்து உள்ளார்.

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் விவசாய தொழிற்சங்க 13வது மாநில மாநாடு நேற்று முன்தினம் தொடங்கியது. மாநாட்டில் சிபிஐ மாநில செயலாளர் முத்தரசன் பங்கேற்றார். பின்னர் அவர் பேசியதாவது: ராமேஸ்வரம் என்பது இறந்தவர்களுக்கு திதி கொடுக்கும் இடம். அண்ணாமலை தனது யாத்திரையை ராமேஸ்வரத்தில் தொடங்கியது மூலம் பா.ஜ.விற்கான முடிவுரை எழுதப்பட்டு விடும் என்பதை காட்டுகிறது. விளம்பரத்திற்காக அண்ணாமலை யாத்திரை செல்கிறார். எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணி சார்பில் மூன்றாவது கூட்டம் நடைபெற உள்ளது.

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றாவது அணி அமைய வாய்ப்பில்லை. அவ்வாறு அமைந்தால் அது பா.ஜ.வின் பி டீமாக தான் இருக்கும். எத்தனை அணிகள் உருவானாலும் இந்தியா அணி தான் மகத்தான வெற்றி பெறும்.

நாடாளுமன்றத்திற்கு வராமல் பிரதமர் மோடி ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறார். கொடநாடு கொலை வழக்கில் குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும் என பன்னீர்செல்வம் ஆகஸ்ட் 1ம் தேதி போராட்டம் நடத்தப்படும் என அறிவித்துள்ளார். நீதிமன்ற வழக்கில் உரிய விசாரணை நடத்தி குற்றவாளி களை தண்டிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஜூலை, 30 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையத்தின் இறுதிக்கட்ட பணிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ராகுல் நாத், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர். ஜி.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் உதயா கருணாகரன், தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.ருத்ரமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர்.சீனிவாச ராவ் மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

கள்ள நோட்டு புழக்கத்தை கட்டுப்படுத்த

உயர் மதிப்பிலான ரூபாய் நோட்டுகளில் 'மைக்ரோசிப்' பொருத்தப்படுமா..?

மக்களவையில் சி.என். அண்ணாதுரை கேள்வி !

புதுடெல்லி, ஜூலை 30

ஒன்றிய அரசு உயர் மதிப்பிலான ரூபாய் நோட்டுக்களை அச்சிடும்போது அதில் மைக்ரோசிப் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளதா என்றும் இந்தியாவில் உள்ள 3 நாணயச்சாலைகளில் அச்சிடப்பட்ட 8810.65 மில்லியன் 500 ரூபாய் நோட்டுகளில் ரிசர்வ் வங்கியில் 7260 மில்லியன் நோட்டுக்கள் மட்டுமே பெறப்பட்டன என்றால் மீதமுள்ள ரூபாய் நோட்டுக்கள் குறித்த விபரம் என்ன என்று திருவண்ணாமலை மக்களவை தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாத்துரை நாடாளுமன்ற மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அது குறித்த விபரம் வருமாறு :

(அ) புதிய வடிவமைப்பு மற்றும் பல்வேறு மதிப்புகள் கொண்ட ரூபாய் நோட்டுக்களை அச்சிடுவது மற்றும் புழக்கத்தில் விடுவது ஆகிய நிலைகளில் பின்பற்றப்படும் அளவு கோல்கள் என்ன,

(ஆ) உயர் மதிப்புடைய ரூபாய் நோட்டுகளை அச்சிடும் போது அவற்றில் மைக்ரோசிப்களை பொருத்தும் திட்டம் ஒன்றிய அரசிடம் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்களை குறிப்பிடவும்,

(இ) 201617 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட 500 ரூபாய் நோட்டுகளின் எண்ணிக்கை மற்றும் அதற்கான மொத்த செலவு என்ன என்பதை தெரிவிக்கவும்,

(ஈ) பெங்களூரு, நாசிக் மற்றும் திவாஸ் ஆகிய 3 நகரங்களில் அமைந்துள்ள அரசு நாணயச்சாலைகளில் 8810.65 மில்லியன் 500 ரூபாய் நோட்டுகள் அச்சிடப்பட்டன. ஆனால், ரிசர்வ் வங்கியில் 7260 மில்லியன் ரூபாய் நோட்டுகள் மட்டுமே பெறப்பட்டதா, அவ்வாறாயின், அந்த நோட்டுக்கள் ஏன் தகுதியற்றவை ஆயின என்பதற்கான காரணங்கள் குறித்தும், ரிசர்வ் வங்கியிடம் சமர்ப்பிக்கப்படாத அந்த 500 ரூபாய் நோட்டுகளின் மதிப்பு என்ன என்பதையும் குறிப்பிடவும்,

(உ) மேற்சொன்ன விவகாரம் குறித்து ஒன்றிய அரசு விசாரணை மேற்கொண்டதா, அப்படியானால் அதன் முடிவுகள் என்ன,

(ஊ) மேற்சொன்ன கணிசமான மதிப்புடைய ரூபாய் நோட்டுகள் காணாமல் போனதால் ஏற்படும் பாதுகாப்பு அபாயங்களை கணக்கிட இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்.பி.ஐ) மற்றும் இதர தொடர்புடைய அதிகார அமைப்புகளுடன் ஒன்றிய அரசு இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா, அப்படியானால் அதன் விவரங்கள்,

(எ) இது போன்ற தவறுகள் மீண்டும் நிகழாமல் இருக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள சரி செய்யும் நடவடிக்கைகள் என்ன ?

இவ்வாறு சி.என். அண்ணாத்துரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விக்கு பதிலளித்த ஒன்றிய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சவுத்ரி குறிப்பிட்டதாவது :

(அ) இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், 1934 இன் பிரிவு 25 இன் படி, வங்கி நோட்டுகளின் வடிவமைப்பு, வடிவம் மற்றும் கச்சாப்பொருள் ஆகியவை பற்றி ரிசர்வ் வங்கியின் மத்திய வாரியம் அளித்த பரிந்துரைகளை பரிசீலித்து மத்திய அரசால் அங்கீகரிக்கிறது. ரூபாய் நோட்டுகளின் வடிவமைப்பு மற்றும் புதிய பாதுகாப்பு அம்சங்கள் மூலம் கள்ள நோட்டுகளை புழக்கத்தை கட்டுப்படுத்தும் வகையிலும், கள்ளநோட்டை அச்சடிக்க இயலாத வகையிலும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அதன்படி, ரிசர்வ் வங்கி ஒன்றிய அரசுடன் கலந்தாலோசித்து, ரூபாய் நோட்டுகளின் வடிவமைப்பு மற்றும் பாதுகாப்பு அம்சங்களை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து, புதிய வடிவமைப்பு மற்றும் பாதுகாப்பு அம்சங்களுடன் புதிய ரூபாய் நோட்டுகளை அறிமுகப்படுத்துகிறது.

(ஆ) இல்லை. (இ) மற்றும் (ஈ) ரிசர்வ் வங்கி அளித்த தகவல்களின்படி, 201617ஆம் ஆண்டில் எஸ்.பி.எம்.சி.ஐ.எல். மற்றும் பி.ஆர்.பி.என்.எம்.பி.எல். ஆகிய அச்சகங்கள் ரிசர்வ் வங்கிக்கு வழங்கிய 500 ரூபாய் நோட்டுகளின் (பழைய மற்றும் புதிய எம்.ஜி. தொடர்) மொத்த நோட்டுகளின் எண்ணிக்கை 9273 மில்லியன் எண்ணிக்கை ஆகும்.

ரிசர்வ் வங்கியின் 17.06.2023 தேதியிட்ட செய்திக் குறிப்பில் அந்த அச்சகங்களிலிருந்து ரிசர்வ் வங்கிக்கு வழங்கப்பட்ட அனைத்து ரூபாய் நோட்டுகளும் முறையாக கணக்கில் சேர்க்கப்பட்டதாக தெரிவித்துள்ளது. மேலும், அச்சகங்களில் அச்சிடப்பட்டு ரிசர்வ் வங்கிக்கு விநியோகிக்கப்படும் ரூபாய் நோட்டுகளை மறுசீரமைப்பு செய்ய கச்சிதமான முறைகள் உள்ளன. அவற்றில் ரூபாய் நோட்டுகள் தயாரிப்பு, இருப்பு மற்றும் விநியோகம் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கான நெறிமுறைகளும் அடங்கியுள்ளன.

(உ) முதல் (எ) ஆகிய கேள்விகளுக்கு (இ) மற்றும் (ஈ) ஆகியவற்றுக்கு சொல்லப்பட்ட பதிலை கருத்தில் கொண்டால் கேள்விகள் எழ வாய்ப்பில்லை.

இவ்வாறு ஒன்றிய நிதித் துறை இணையமைச்சர் பதிலளித்தார்.

2023 ஆகஸ்ட் 3 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை, சென்னை இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் நடைபெறவுள்ள 7–வது ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை – 2023 போட்டியில் பங்கேற்க வந்துள்ள, மலேசிய நாட்டை சேர்ந்ர ஹாக்கி வீரர்கள் மற்றும் பயிற்சி யாளர்களுக்கு நேற்று சென்னை விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

'நெக்ஸ்ட்' தேர்வை ரத்து செய்ய வேண்டும்!

மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை!

புதுடெல்லி, ஜூலை30- நாடாளுமன்ற மக்களவையில் விதி எண் 377ன் கீழ், 'நெக்ஸ்ட்' தேர்வை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தினார். இதுபற்றி அவர் தெரிவித்து இருப்பதாவது:

தேசிய மருத்துவ ஆணையத்தின் முரண்பட்ட தகவல்களால் தேசிய வெளியேறும் தேர்வில் (நெக்ஸ்ட்) ஒரு குழப்பமான சூழல் மாணவர்களிடையே தொடர்கிறது. கடந்த 2019ம் ஆண்டு எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் ஒரு மாதிரித் தேர்வு அறிவிக்கப்பட்டது, சொல்லப்போனால் மாணவர்கள் மீது அது திணிக்கப்பட்டது. அது விடைகளில் ஒன்றை தேர்ந்தெடுக்கும் கேள்வி முறை ஆகும். தேர்வுக்கு படிக்கும் போது, மாணவர்கள் மருத்துவ படிப்பிலும் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் தற்போதைய பல்கலைக் கழக பாடத்திட்டம் செய்முறை மற்றும் கல்வியறிவு இரண்டையும் மதிப்பிடுகிறது.

இதுமட்டுமின்றி மாணவர்கள் 'நெக்ஸ்ட்' தேர்வுக்காக பயிற்சி மையங்களையும் நாட வேண்டியிருக்கும். இது மாணவர்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தும்.

எனவே இந்த தேர்வை திரும்பப்பெறக்கோரி தஞ்சாவூர், சென்னை, திருவாரூர் மற்றும் திருச்சி மருத்துவக்கல்லூரி மாணவர்கள் இந்த மாத தொடக்கத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். தமிழ்நாடு அரசு 'நீட்' தேர்வை தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இந்தநிலையில் அதில் மேலும் ஒரு தேர்வை சேர்ப்பது முற்றிலும் தேவையற்றது. ஏற்றுக்கொள்ள முடியாதது. எனவே நெக்ஸ்ட் தேர்வுக்கு தடை விதிக்க வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்ற தேர்வுகளை அறிமுகப்படுத்துவதை நிறுத்த வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில்

பெண்களின் பங்களிப்பு குறைந்து வருகிறதா?

மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பெண்களின் பங்களிப்பு குறைந்து வருவது ஏன்? அதை சரி செய்ய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்றும், ஏப்ரல் 2022 முதல் ஜனவரி 2023 வரை மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் (MGNREGS) பணிபுரிந்த பெண் தொழிலாளர்களின் சதவீதம் என்ன? என்றும், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த ஒன்றிய ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் சத்வி நிரஞ்சன் ஜோதி "மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பெண்களின் பங்களிப்பு என்பது குறையவில்லை என்றும் இது திறன் சாரா உடல் உழைப்பு செய்ய விரும்பும் கிராமப்புற நபர்கள் பங்கேற்கும் கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும் வேலைவாய்ப்பு திட்டம்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும் "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் சட்டம் (MNREGA 2005), பயனாளிகளில் குறைந்த பட்சம் மூன்றில் ஒரு பகுதியினர் பதிவு செய்து வேலை கோரிய பெண்களாக இருக்கும் வகையில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் என்பது பாலின பாகுபாடு இல்லாத நடுநிலையான ஒரு திட்டமாகும். இது ஆண்களுக்கு இணையான ஊதியத்தை வழங்குவதன் மூலம் பெண்களின் பங்கேற்பை ஊக்குவிக்கிறது. பெண்களுக்கான ஊதிய விகிதங்களின் தனி அட்டவணையை வழங்குதல், குழந்தை காப்பகத்திற்கான வசதிகள், குழந்தைகளுக்கான வேலை பக்க கொட்டகைகள் மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் போன்றவையும் செய்து தரப்படுகிறது. தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்துடன் (NRLM) இணைந்து பெண்களுக்கென்று தனி குழுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் பெண்களின் பங்கேற்பை எளிதாக்கியுள்ளது. இத்திட்டம் பயனாளிகளின் குடியிருப்புக்கு அருகிலேயே பணிகளை வழங்கவும் முயற்சிக்கிறது. மேலும் தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பெண்களின் பங்களிப்பு என்பது 85.65 சதவிகிதமாக உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. பாக முகவர்கள் கூட்டம்!

மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிவிப்பு!

மதுரை, ஜூன் 30 - மதுரை தெற்கு மாவட்டம் பாக முகவர் BLA 2 கூட்டம் நாளை 31- 07 -2023 திங்கள் கிழமை நடைபெறுகிறது.

திருமங்கலம் சட்டமன்ற தொகுதி காலை 10.30 மணி, இடம் கொடி மஹால், குதிரைசாணி குளம், நான்கு வழிச்சாலை, திருமங்கலம். உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதி மாலை 4.30 மணி , இடம் குரு மஹால்,பேரையூர் ரோடு,

உசிலம்பட்டி திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி மாலை 05.30 மணி, இடம் ஸ்ரீ சாய் மஹால், திருப்பரங்குன்றம் மதுரை தெற்கு மாவட்ட கழக செயலாளர் சேடபட்டி மு. மணிமாறன் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள், மாநில அணி நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறும் கூட்டத்தில் பாக முகவர்கள் BLA 2 மற்றும் மதுரை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மதுரை தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் மு.மணிமாறன் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு

நெடுஞ்சாலைத்துறை

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.16/2023–2024/வ1/நாள்–26.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், **தூத்துக்குடி (நெ), க(ம)ப கோட்டம்** சார்ந்த **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 (8 வேலைகள்) திட்டப்பணிக்கு** இணையவழியில் மட்டுமே **இருஉறை** முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **21.08.2023 – 14.00 மணிவரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **05.08.2023 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4150/ஒப்பந்தப்புள்ளி/2023

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
க(ம)ப வட்டம், திருநெல்வேலி

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"